விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்
முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 11

நேரம் : 1.30 மணி

கணிதம்

மதிப்பெண்கள்: 50

பிரிவு - I

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: **10×1=10**

1) $A = \{(x, y) : y = \sin x, x\in R\}$ மற்றும் $B = \{(x, y) : y = \cos x, x\in R\}$ எனில் $A\cap B$ -ல்
   a) உறுப்புகளில்லை b) எண்ணிலடங்கா உறுப்புகள் உள்ளன
   c) ஒரே ஒரு உறுப்பு உள்ளது d) தீர்மானிக்க இயலாது

2) 3 உறுப்புகள் கொண்ட கணத்தின் மீதான தொடர்புகளின் எண்ணிக்கை
   a) 9 b) 81 c) 512 d) 1024

3) $f(x) = x^2$ என்ற சார்பு இருபுறச் சார்பாக அமைய வேண்டுமெனில் அதன் சார்பகமும், துணைச்சார்பகமும் முறையே
   a) R, R b) R, $(0, \infty)$ c) $(0, \infty)$, R d) $[0, \infty)$, $[0, \infty)$

4) $X = \{1, 2, 3, 4\}$ மற்றும் $R = \{(1, 1), (1, 2), (1, 3), (2, 2), (3, 3), (2, 1), (3, 1), (1, 4), (4, 1)\}$ எனில் R என்பது
   a) தற்சுட்டுத் தொடர்பு b) சமச்சீர் தொடர்பு
   c) கடப்புத் தொடர்பு d) சமானத் தொடர்பு

5) $|x-1| \geq |x-3|$ என்ற அசமன்பாட்டின் தீர்வுக் கணம்
   a) $[0, 2]$ b) $[2, \infty)$ c) $(0, 2)$ d) $(-\infty, 2)$

6) $\frac{kx}{(x+2)(x-1)} = \frac{2}{x+2} + \frac{1}{x-1}$ எனில், k-ன் மதிப்பு
   a) 1 b) 2 c) 3 d) 4

7) $\log_3 11 . \log_{11} 13 . \log_{13} 15 . \log_{15} 27 . \log_{27} 81$-ன் மதிப்பு
   a) 1 b) 2 c) 3 d) 4

8) $\left(1+\cos\frac{\pi}{8}\right)\left(1+\cos\frac{3\pi}{8}\right)\left(1+\cos\frac{5\pi}{8}\right)\left(1+\cos\frac{7\pi}{8}\right) =$
   a) $\frac{1}{8}$ b) $\frac{1}{2}$ c) $\frac{1}{\sqrt{3}}$ d) $\frac{1}{\sqrt{2}}$

9) $\tan 40^o = \lambda$ எனில் $\frac{\tan 140^o - \tan 130^o}{1 - \tan 140^o \tan 130^o} =$
   a) $\frac{1-\lambda^2}{\lambda}$ b) $\frac{1+\lambda^2}{\lambda}$ c) $\frac{1+\lambda^2}{2\lambda}$ d) $\frac{1-\lambda^2}{2\lambda}$

10) $\cos 1^o + \cos 2^o + \cos 3^o + \ldots\ldots + \cos 179^o =$
   a) 0 b) 1 c) −1 d) 89

பிரிவு - II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி: (16 கட்டாய வினா) **4×2=8**

11) $n(A) = 10$ மற்றும் $n(A\cap B) = 3$ எனில், $n((A\cap B)'\cap A)$-ஐ காண்க.

12) f மற்றும் g என்ற இரு சார்புகள் R-லிருந்து R-க்கு $f(x) = 3x-4$ மற்றும் $g(x) = x^2+3$ என வரையறுக்கப்படுகிறது எனில், $g \circ f$ மற்றும் $f \circ g$ காண்க.

13) $3|x-2|+7 = 19$-ன் தீர்வு காண்க.

14) $3x^3+8x^2+8x+a$ என்ற பல்லுறுப்புக் கோவையின் ஒரு காரணி $x^2+x+1$ எனில் a-ன் மதிப்பைக் காண்க.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

15) மதிப்பு காண்க: cosec $(-1410^{\circ})$

16) $a \cos\theta = b$ மற்றும் $c \sin\theta = d$ லிருந்து $\theta$-ஐ நீக்குக. a, b, c, d ஆகியவை மாறிலிகள்.

## பிரிவு - III

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி: (22 கட்டாய வினா) $4\times3=12$**

17) Z-ல் "m−n ஆனது 7 ஆல் வகுபடுமெனில் mRn" எனத் தொடர்பு R வரையறுக்கப்பட்டால் R என்பது சமானத் தொடர்பு என நிரூபிக்க.

18) $\frac{1}{2\cos x-1}$ என்ற சார்பின் வீச்சகத்தைக் காண்க.

19) பகுதி பின்னங்களாகப் பிரித்தெழுதுக $\frac{1}{x^2-a^2}$.

20) $\sin 34^{\circ} + \cos 64^{\circ} - \cos 4^{\circ}$ இன் மதிப்பைக் காண்க.

21) $A+B = 45^{\circ}$ எனில், $(1+\tan A)(1+\tan B) = 2$ என நிறுவுக.

22) தீர்வு காண்க: $2x^2+x-15 \le 0$

## பிரிவு - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி: $4\times5=20$**

23) $f : R\to R$ என்ற சார்பு $f(x) = 3x-5$ என வரையறுக்கப்படின் அது ஒரு இருபுறச்சார்பு என நிரூபித்து அதன் நேர்மாறு காண்க.

**(அல்லது)**

ஒரு உற்பத்தியாளர் 12 விழுக்காடு அமிலம் கொண்ட 600 லிட்டர் கரைசல் வைத்திருக்கிறார். இதனுடன் எத்தனை லிட்டர்கள் 30 விழுக்காடு அமிலத்தைக் கலந்தால் 15 விழுக்காட்டிற்கும் 18 விழுக்காட்டிற்கும் இடைப்பட்ட அடர்த்தி கொண்ட அமிலக் கரைசல் கிடைக்கும்?

24) தீர்க்க $\frac{X-1}{X-3} < 3$. **(அல்லது)**

$\log\frac{75}{16} - 2\log\frac{5}{9} + \log\frac{32}{243} = \log 2$ என நிரூபிக்க.

25) $A+B+C = 180^{\circ}$ எனில் $\sin 2A+\sin 2B+\sin 2C = 4\sin A\sin B\sin C$ என நிறுவுக. **(அல்லது)**

$\theta+\phi = \alpha$ மற்றும் $\tan\theta = k\tan\phi$, எனில் $\sin(\theta-\phi) = \frac{k-1}{k-1}\sin\alpha$ என நிறுவுக.

26) $f(x) = \begin{cases} x^2+x-5 & \text{if } x\in(-\infty,0) \\ x^2+3x-2 & \text{if } x\in(3,\infty) \\ x^2 & \text{if } x\in(0,2) \\ x^2-3 & \text{மற்ற இடங்களில்} \end{cases}$ என வரையறுக்கப்படின் $-3, 5, 2, -1, 0$ ஆகியவற்றில் f-ன் மதிப்புகளைக் காண்க.

**(அல்லது)**

$\sin x = \frac{4}{5}$ (முதற் காற்பகுதியில் உள்ளது) மற்றும் $\cos y = \frac{-12}{13}$ (இரண்டாம் காற்பகுதியில் உள்ளது) எனில், (i) $\sin(x-y)$, (ii) $\cos(x-y)$ ஆகியவற்றைக் காண்க

Kindly send me your study materials to padasalai.net@gmail.com